செய்தி வெளியீடு எண்: 299 நாள்: 05.06.2013

பத்திரிக்கைச் செய்தி

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன் படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் ஜூன் 2013 மாதத்திற்கான மாதாந்திர குறைதீர் கூட்ட முகாம் 08.06.2013 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி,<br>246, தங்கசாலை தெரு, சென்னை 600 003, (மெமோரியல் ஹால் அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை நடுநிலைப்பள்ளி,<br>103, E H ரோடு, காரனேஷன் நகர், கொருக்குபேட்டை, சென்னை 600 021<br>( IOC கொருக்குபேட்டை அருகில்) |
| 3 | பெரம்பூர் | சென்னை உயர்நிலைப்பள்ளி,<br>21, சோமையா தெரு, அகரம், சென்னை 82 ( T A கோயில் தெரு அருகில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை நடுநிலைப்பள்ளி,<br>32, சுந்தரம் தெரு, புரசைவாக்கம், சென்னை 7 ( புரசைவாக்கம் டேங்க் அருகில்) |
| 5 | அம்பத்தூர் | வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி,<br>கோலடி மெயின் ரோடு, சின்ன கோலடி, திருவேற்காடு, சென்னை 77 |
| 6 | வில்லிவாக்கம் | சென்னை நடுநிலைப்பள்ளி,<br>எண் 1, TSD நகர் அரும்பாக்கம், சென்னை 106 ( கோயம்பேடு சிக்னல் அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | அகத்தியர் வித்தியாலயா, 54, கணக்கர் தெரு, திருவொற்றியூர், சென்னை 19 |
| 8 | ஆவடி | CSI தொடக்கப்பள்ளி,<br>54, மெயின் ரோடு, சேக்காடு, சென்னை 71 , (சர்ச் அருகில்) |
| 9 | தி.நகர் | அரசு ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளி,<br>பு எண் 2, ஆற்காடு சாலை , வளசரவாக்கம், சென்னை 87 |
| 10 | மயிலாப்பூர் | சமுதாய நல கூடம் ,<br>காமராஜர் சாலை, லட்சுமிபுரம், திருவான்மியூர், சென்னை 41, ( காந்தி சிலை அருகில்) |
| 11 | பரங்கிமலை | நகராட்சி நடுநிலைபள்ளி,<br>பெரிய தெரு , கீழ்கட்டளை பேருந்து நிலையம் அருகில், சென்னை 117 |
| 12 | தாம்பரம் | ஆனந்தபுரம் நகராட்சி பூங்கா,<br>கிழக்கு தாம்பரம், சென்னை 51, ( IAF அலுவலகம் அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>112, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சைதாப்பேட்டை, சென்னை 15 |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை நடுநிலைப்பள்ளி<br>ராமநாயக்கன் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை 34 ( சுதந்திர தின பார்க் அருகில்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சி சமுதாய கல்லூரி<br>24 அருணாசலம் தெரு, சிந்தாதிரிபேட்டை, சென்னை 2 ( பால் மைதானம் அருகில்) |
| 16 | சோழுங்கநல்லூர் | அரசு மேல்நிலைப்பள்ளி,<br>5, கிழக்கு கடற்கரை சாலை, உத்தண்டி, சென்னை 119, (பனையூர் பஸ் நிறுத்தம் அருகில்) |

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**